உடனடியாகத் தகவல் தெரிவிக்க வசதியாக வயர்லெஸ் போன்ற வசதிகளையும் செய்து தர இயலுமா என்பதை நான் உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோதனைச் சாவடிகள் இன்றைய தினம் சிறப்பாக பணிகளை மேற்கொண்டிருப்பதால்தான் நான் சொல்லிய அந்தத் தொகை 1986-87-லே நம்முடைய அரசுக்குக் கிடைத்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சோதனைச் சாவடியிலே பணிபுரிகிற அதிகாரிகளுக்கு வேறு வசதிகளைச் செய்து கொடுத்தால்தான் அவர்களுடைய பணியைச் சிறப்பாக மேற்கொள்ள முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் அரசின் கவனத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏரிக்கு தண்ணீரை திருப்பி விடுதல்.

81—(*வினா எண் 5229)—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், நாமக்கல் வட்டம், காளப்பநாய்க்கன்பட்டி கிராமத்தின் அருகேயுள்ள கருமலைக் காட்டின் அருகே கட்டியுள்ள ஏரிக்கு தண்ணீரை திருப்பிவிட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டம் நாமக்கல் வட்டம் காளப்பநாயக்கன்பட்டி கிராமத்தின் அருகேயுள்ள கருமலைக்காட்டின் அருகில் கட்டியுள்ள ஏரியின் அருகே, இடதுபுற கரையின் கிழக்கே ஓடும் ஓடையிலிருந்து தண்ணீரை திருப்பி விடுவது சாத்தியமென்றாலும் இத்திட்டத்தின்படிதிருப்பி விடப்படும் பகுதி பாதுகாக்கப்பட்ட வனத்திற்குள் வருகின்றது என்பதாலும் இந்த திட்டத்தினால் கூடுதல் உணவு உற்பத்தியில் எந்த மாறுதலும் இல்லாமல் உள்ளது என்ற காரணத்தினாலும் பொதுப்பணித் துறையினால் இத்திட்டத்தை எடுத்துக் கொள்ள இயலவில்லை.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் தொகுதியில் உள்ள காளப்பநாயக்கன்பட்டி கிராமத்தின் அருகேயுள்ள கருமலைக்காட்டின் அருகில் கட்டியுள்ள குட்டையின் கரை அங்கே நாங்கள் இருக்கிற பகுதிக்கு அருகில் இருக்கிறது என்பதாலும், அங்கே இதுபோன்ற பிரச்சினைகள் இல்லாத காரணத்தாலும், அதற்குத் தண்ணீர் வரத்து வருகின்ற பகுதி புறம்போக்கு பகுதியாகவும் பட்டா நிலமாகவும் இருப்பதாலும், இதனை மீண்டும் மறு ஆய்வு செய்து இந்தத் திட்டத்திற்கு தண்ணீர் வரத்தை ஏற்படுத்தி

1987 நவம்பர் 12]

அதற்குப் பக்கத்தில் உள்ள 500 கிணறுகளுக்குப் பாசன வசதி கிடைக்கிற வகையில் ஏற்பாடு செய்ய அரசு மீண்டும் முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய உணர்வைப் புரித்து இருக்கிறோம். அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு மறு ஆய்வு செய்து வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வசதி இல்லாத சிறிய மசூதிகளுக்கு மானியம்:

82—(*வினா எண். 9098)—டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வசதி இல்லாத சிறிய மசூதிகளுக்கு அரசு எவ்வளவு மானிய பணம் கொடுக்கிறது?

(ஆ) இதுவரை எத்தனை மசூதிகளுக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டு உள்ளது?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் வசதி இல்லாத சிறிய மசூதிகளைப் புதுப்பிக்கவும், புனரமைக்கவும் ஒவ்வொரு மசூதிக்கும் ரூ. 15,000 வரை அரசு மானியம் வழங்கப்படுகிறது.

(ஆ) இதுவரை ரூ. 1,35,00,000 மானியம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் 2,362 மசூதிகள் செப்டம்பர் 1987 முடிய பயனடைந்துள்ளன.

டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வழங்கப்படுகிற பணமானது போதுமானதாக இல்லாத காரணத்தினால், மேலும் இப்பணத்தை அதிகரித்து தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணம் அதிகமாக கொடுக்கிற நேரத்தில் பயன்படுகின்ற மசூதிகளின் எண்ணிக்கை குறைவாகும் என்ற உணர்வின் அடிப்படையில், பரவலாக எல்லா மசூதிகளும் இதனால் பயன் அடைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் ரூ. 10,000லிருந்து ரூ. 15,000க்கு ஓரளவிற்கு உயர்த்திக் கொடுத்திருக்கிறோம்